1974 சனவரி 21]

*47 வினு—திரு. வீ. கார்த்திசன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், குட்டம் ஊராட்சிப் பகுதியில் அடங்கிய பெரிய ஊருணியை (Spring) ஆழப்படுத்தி விவசாயப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

Bleeding Madras variety of Handloom cloth

*48 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the demand for Bleeding Madras varieties has increased in 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1972-ம் ஆண்டிலும் சனவரி முதல் சூலை 1973 வரை ஏற்றுமதி செய்யப் பட்டவகைளின் மதிப்பு வருமாறு:

1972	..	15-55 இலட்சங்கள்
ஜனவரி முதல் சூலை 1973 வரை	..	10-55 ,,

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயிருந்து இந்த வண்ணம்மாறும் கைத்தறி துணிகளுக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடுகளிலே சந்தை மிகவும் அதிகமாக இருந்தது. ஆனுல் அது இப்பொழுது குறைந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே புதிய சந்தைகளை ஏற்படுத்த மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நமது அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இடைக்காலத்திலே ஒரு மந்த நிலை ஏற்பட்டது. இப்பொழுது சுமார் 15½ இலட்சம் ரூபாய்க்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்த நாடுகளிலே இதுபோன்ற வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கே முயற்சிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த 'ப்ளீடிங் மெட்ரூஸ்'க்கு அமெரிக்க நாட்டிலே நிறைய கிராக்கியிருந்ததும், இப்பொழுது மந்த நிலை ஏற்பட்டிருப்பதும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்ருகத் தெரியும், மேலும் நம்முடைய

நெசவாளர்களில் பலர் இப்பொழுது வேலையில்லாமல் இருக்கும் இந்த நேரத்தில் இதை உற்சாகப்படுத்த, அமெரிக்க நாட்டோடு தொடர்பு கொண்டு இந்த ப்ளீடிங் மெட்ருசை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யவும், அந்நிய செலாவணியைப் பெறவும் நம்முடைய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் இப்பொழுது சொன்னேன். 15½ இலட்சம் ரூபாய்க்கு வந்திருக்கிறது.

Silk Farms at Kolatti and Masinagudi

* 48 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the the Minister for Industries be pleased to state the amount of money spent on large scale silk farms at Kolatti and Masinagudi so far and the income derived from the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கொலட்டியிலுள்ள பெரிய அளவு பட்டுப் பண்ணையில் 1966-67 முதல் 1971-72 வரை ரூ. 14,80,271-ம் மாசினகுடியிலுள்ள பட்டுப்பண்ணையில் 1967-68 முதல் 1971-72 வரை ரூ. 2,90,528.89-ம் செலவிடப்பட்டுள்ளது மேலே குறிப்பிடப்பட்ட காலங்களில் கொலட்டி பட்டுப் பண்ணையில் ரூ. 2,95,601 மாசினகுடி பண்ணையில் ரூ. 24,109-ம் வருமானமாக வந்தது.

THIRU B. VENKATASWAMY : Sir, from the answer given by the Hon. Minister for Industries I understand the Kolatti Silk Farm is one of the largest Silk Farms in the World. But the income that is derived from the farm is very low when compared to the investment that has been made. May I know from the Hon. Minister when we are going to recoupe this amount ? Also, the wage paid to the workers is only one or two rupees per day, even after the minimum wages Act has been passed. Will the Government take into consideration all these things and increase the wages to the coolies there?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபோன்ற பண்ணைகள் உருவாக்கப்படுவது, இந்தச் செடிகள் வளர்க்கப்பட்டு, கக்கூன்ஸ் வளர்க்கப்பட்டு பட்டு உற்பத்தியாகவேண்டுமென்ற நேரத்தில், இப்பொழுது வளமாக வந்துள்ளது. இனிமேல் வருவாய் தொடங்கும்.